**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2019–2020 ஆம் ஆண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை) அவர்களின் அறிவிப்பு – பார்வைத் திறன் மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கான 10 அரசு சிறப்புப் பள்ளி விடுதிகளுக்கு சலவை இயந்திரம் வழங்க ரூ.15,00,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 24**

**நாள்: 03.10.2019**
**விகாரி – புரட்டாசி, 16**
**திருவள்ளுவர் ஆண்டு, 2050**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 87, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28.09.2013.
2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2019–2020 நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை) அவர்களின் அறிவிப்பு, நாள் 10.07.2019.
3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடித எண் 1525/சி.ப.4/2019, நாள்16.07.2019.

-----

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2019–2020ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, 10.07.2019 அன்று, மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்கள் இன்னபிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார்:-

> ‘‘பார்வைத்திறன் மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கான 10 அரசு சிறப்புப் பள்ளி விடுதிகளுக்கு சலவை இயந்திரம் ரூ. 15.00 இலட்சம் செலவில் வழங்குதல்.’’

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்படும் 22 சிறப்புப் பள்ளிகளில் முதற்கட்டமாக 12 சிறப்புப் பள்ளிகளுக்கு (பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் 4, செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் 6, கடும் கை, கால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்புப் பள்ளி 1 மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஒரு மையம்) தலா ஒரு விசைச் சலவை இயந்திரம் (Power Laundry) வீதம் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை மூலம் வழங்கப்பட்டது எனவும், இச்சிறப்புப் பள்ளிகளில் தற்போது இவை பயன்பாட்டில் உள்ளது எனவும், இதன் மூலம் 850க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயன் பெற்று வருகின்றனர் எனவும், எஞ்சிய 10 சிறப்புப் பள்ளிகளில் (பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள்–6 மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள்–4) உள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாற்றுத் திறனாளி

(த.பி.பா.)

மாணவர்களுக்கு சலவை இயந்திரங்கள் வழங்கப் பெற்றால் 266 மாற்றுத் திறனாளி மாணவர்கள் பயன் பெறுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, எஞ்சிய 10 பள்ளிகளில் (பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள்–6 மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள்–4) உள்ள விடுதிகளுக்கு கீழ்க்காணும் விவரப்படி 3 விசைச் சலவை இயந்திரங்கள் மற்றும் 7 சலவை இயந்திரங்கள் தேவைப்படுகிறது என மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் தெரிவித்துள்ளார்:-

**விசைச் சலவை இயந்திரம் தேவைப்படும் பள்ளிகள் விவரம்:**

| வ. எண் | சிறப்புப் பள்ளி / மாவட்டம் | தேவைப்படும் சலவை இயந்திரம் | ஒரு விசைச் சலவை இயந்திரத்தின் தோராய விலை GST உட்பட |
|---|---|---|---|
| 1. | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி, புதுக்கோட்டை | 1 | ரூ.3,95,000 |
| 2. | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, ஊட்டி | 1 | ரூ.3,95,000 |
| 3. | பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி, புதுக்கோட்டை | 1 | ரூ.3,95,000 |
| மொத்தம் | | 3 | ரூ.11,85,000 |

**சலவை இயந்திரம் தேவைப்படும் பள்ளிகள் விவரம் :**

| வ. எண் | சிறப்புப் பள்ளி / மாவட்டம் | தேவைப்படும் சலவை இயந்திரம் | ஒரு சலவை இயந்திரத்தின் தோராய விலை |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப்பள்ளி, கோயம்புத்தூர் | 1 | ரூ. 45,000 |
| 2. | பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப்பள்ளி, சிவகங்கை | 1 | ரூ. 45,000 |
| 3. | பார்வையற்றோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி, மதுரை | 1 | ரூ. 45,000 |
| 4. | பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளி, கடலூர் | 1 | ரூ. 45,000 |
| 5. | பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளி, தருமபுரி | 1 | ரூ. 45,000 |
| 6. | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி, தாம்பரம் | 1 | ரூ. 45,000 |
| 7. | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி, கடலூர் | 1 | ரூ. 45,000 |
| மொத்தம் | | 7 | ரூ. 3,15,000 |

**4.** மேற்காணும் விவரப்படி, **3** விசைச் சலவை இயந்திரங்கள் மற்றும் **7** சலவை இயந்திரங்கள் வழங்க தேவைப்படும் மொத்த நிதி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:

| வ எண் | விவரம் | எண்ணிக்கை | தோராயமாக தேவைப்படும் தொகை விவரம் |
|---|---|---|---|
| **1.** | விசைச் சலவை இயந்திரம் | **3** | ரூ.**11,85,000/–** |
| **2.** | சலவை இயந்திரம் | **7** | ரூ. **3,15,000/–** |
| மொத்தம் | | **10** | ரூ.**15,00,000/–** |

மேற்படி விலைப்பட்டியல் சரக்கு மற்றும் சேவை வரி (GST) சேர்ந்த விலையாகும் என்பதால் மேற்படி சலவை இயந்திரங்கள் வாங்க மொத்தம் ரூ.**15,00,000/–** நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

**5.** மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மேலே பத்தி–**3**ல் குறிப்பிட்டப்பட்ட **10** அரசு சிறப்புப் பள்ளி விடுதிகளில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களின் நலன் கருதி, **3** சிறப்புப் பள்ளி விடுதிகளுக்கு விசைச் சலவை இயந்திரங்களும், **7** சிறப்புப் பள்ளி விடுதிகளுக்கு சலவை இயந்திரங்களும் ரூ.**15,00,000/–** (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் வாங்கி வழங்க ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி–**5**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| "**2235** – சமூக பாதுகாப்பும் நலனும் – **02** – சமூக நலன் **101** மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் AA பார்வையற்றோர் பள்ளி – **319** இயந்திரமும் சாதனமும் –**01** – வாங்குதல்."<br>[IFHRMS த.தொ.கு – **2235 02 101** AA **31901**]<br>(Old த.தொ.கு – **2235 02 101** AA **1917**) | -- | ரூ.**11,85,000/–** |
| "**2235** – சமூக பாதுகாப்பும் நலனும் – **02** –சமூக நலன் **101** மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – AR காதுகேளாதோர் பள்ளிகள் – **319** இயந்திரமும் சாதனமும் – **01** – வாங்குதல்."<br>[IFHRMS த.தொ.கு – **2235 02 101** AR **31901**]<br>(Old த.தொ.கு – **2235 02 101** AR **1913**) | -- | ரூ.**3,15,000/–** |

**7.** மேலே பத்தி–**5**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு ''புதுப்பணி'' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு, பொது–**1**) துறையால் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு, பொது–**1**) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை **2019–2020**ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (சந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல்சாரா எண் 47090/நிதி(ச.ந)/2019, நாள் 01.10.2019–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. மேலும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1599 (ஆயிரத்து ஐநூற்று தொன்னூற்று ஒன்பது) ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர்,
சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18./ பெயரில்
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.

**நகல்:**
சம்மந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
( மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
நிதி (சந) (வ.செ.ப–1) துறை, சென்னை–9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.